1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கே ஊத் தொழிற்சாலை தொடங்கப் படுவதற்கு முன்னாலேயே இந்தத் தொழிற்சாலைகள் அங்கே உருவாக வேண்டு மென்ற முறையிலே நாம் அறிக்கைகள் தயாரிதது அந்தப் பகுதி மக்களோடு கலந்து பேசி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

New Industries for Tiruchirappalli.

* 171 *Q.*— THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey has been undertaken by the Government to examine the scope of industrial growth in and around Tiruchirappalli district in 1973 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சென்னையிலுள்ள சிறுதொழில்கள் பணிக்கழகம் 1972 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் திருச்சி மாவட்டத்தில் தீவிர ஆய்வுக்கான முன் ஆய்வு செய்தது.

(ஆ) ஆய்வு அறிக்கை இன்னும் வரைவு நிலையில் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, கொதிகலன் தொழிற்சாலை அருகில் அனல் மின் நிலையம் அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அனல் மின் நிலையம் அங்கே இல்லை. தூத்துக்குடியில் அண்மையில் அனல் நிலையம் தரப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் துவக்க விதிவிலக்குகள்

*** 172 வினா—திரு. கி. ஜெயராமன் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுதொழில் வளருவதற்கு உதவுகின்ற முறையில் தொழிற்சாலைகள் அமைத்து நடத்துவதற்கு அனுமதி வழங்குகின்ற சட்டத்திலிருந்தும், விதி முறைகளிலிருந்தும் குறிப்பிட்ட முறைகளில் விதிவிலக்கு அளிக்க வேண்டு மென்று சேலம் மாவட்ட தொழில் நடத்த அனுமதி கொடுப்பதை துரிதப் படுத்த உதவும் கமிட்டியின் தீர்மானத்தின்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?